A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
-Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN


4th Floor, SIDCO Corporate Office Building,Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email :tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in


## முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்

**மேல்முறையீட்டு மனு எண் 47 / 2024**

திரு V. பாலகிருஷ்ணன்,
எண்.18, நட்சத்திர நகர், முதல் தெரு,
தஞ்சாவூர் – 613 005.

………மேல்முறையீட்டாளர்
(திரு V. பாலகிருஷ்ணன்)

எதிர்

1) செயற்பொறியாளர்/ இ&ப/ நகரியம்/தஞ்சாவூர்,
தஞ்சாவூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
10A, TNEB, கோர்ட் ரோடு, தஞ்சாவூர் – 613 001.

2) உதவி செயற்பொறியாளர்/ இ&ப / நகரியம்/தஞ்சாவூர்,
தஞ்சாவூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
10A, TNEB, கோர்ட் ரோடு, தஞ்சாவூர் – 613 001.

3) உதவி மின்பொறியாளர்/ இ&ப / புறநகர்/மேற்கு–தஞ்சாவூர்,
தஞ்சாவூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
ராஜாஜி ரோடு, E.B. காலனி, நாஞ்சி ரோடு,
தஞ்சாவூர் – 613 006.

. . . எதிர்மனுதாரர்கள்
(திரு M. மணிவண்ணன், செயற்பொறியாளர்/ இ&ப/ நகரியம்/தஞ்சாவூர்
திரு K. அண்ணாசாமி, உதவி செயற்பொறியாளர்/ இ&ப / நகரியம்/தஞ்சாவூர்
திரு A. முத்துகுமரன், உதவி மின்பொறியாளர்/ இ&ப / புறநகர்/மேற்கு–தஞ்சாவூர்)

**மனு பெறப்பட்ட நாள்: 25–06–2024**

**கேட்புரை நாள்: 21–08–2024**

**ஆணை நாள்: 29–08–2024**

25.06.2024 அன்று பெறப்பட்ட திரு V. பாலகிருஷ்ணன், எண்.18, நட்சத்திர நகர், முதல் தெரு, தஞ்சாவூர் – 613 005அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 47/2024 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 21.08.2024 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

**1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:**

தான் வசித்து வரும் பகுதியில் தற்போது உபயோகத்தில் இல்லாத உயரழுத்த மின்பாதையை அகற்ற கோரி மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

**2.0 வழக்கின் சுருக்கம்:**

2.1 நட்சத்திர நகர், 1 ஆம் தெரு முதல் 4 ஆம் தெரு வரை குடியிருக்கும் நகர் வாசிகள் அனைவரும் தாங்கள் வசித்து வரும் பகுதியில் தற்போது உபயோகத்தில் இல்லாத உயரழுத்த மின்பாதையை அகற்ற கோரி மேல்முறையீட்டாளர் விண்ணபித்துள்ளார்.

2.2 மேற்கூறிய விண்ணப்பத்தின் அடிப்படையில் கள ஆய்வு மேற்கொண்டு உயரழுத்த மின்பாதையை மாற்றி அமைக்க உண்டாகும் மதிப்பீட்டுத் தொகையை செலுத்தும்பட்சத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற அறிவிப்பு கடிதம் மேல்முறையீட்டாளருக்கு வழங்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 எதிர்மனுதாரரின் பதில் திருப்தி அளிக்காத காரணத்தால் மின்பாதையை அகற்ற கோரி மேல்முறையீட்டாளர் தஞ்சாவூர் மின்பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை 04.03.2024 அன்று அணுகியுள்ளார்.

2.4 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், தஞ்சாவூர் மின்பகிர்மான வட்டம் 28.03.2024 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில்

அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

3.0 <u>மன்றத்தின் தீர்வு :</u>

3.1 தஞ்சாவூர் மின்பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 28.03.2024 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *"மன்றத்தின் தீர்வு:*
> *புகார் மனுதாரர் திரு V.பாலகிருஷ்ணன், எண். 18, நட்சத்திர நகர், முதல் தெரு, தஞ்சாவூர் மன்ற கூட்டத்தில் கலந்து கொண்டார். மனுதாரர் கோரிய மாற்றுவழி 14.03.2024 மற்றும் 15.03.2024 அன்று கள ஆய்வு செய்யப்பட்டது. மேற்கண்ட ஆய்வில் இரண்டு உயரழுத்த மின்பாதையை நுகர்வோர் கூறும் மாற்றுவழிப் பாதையில் மாற்றியமைக்க தொழில்நுட்ப சாத்திய கூறுகள் இல்லை எனவும் ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்ட மதிப்பீட்டின்படி மனுதாரர் முழு தொகையினை (ரூ.9,05,680/-) செலுத்தினால் உயரழுத்த மின்பாதையை மாற்றி அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று மன்றத்தின் மூலம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது."*

4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 21.08.2024 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் திரு V. பாலகிருஷ்ணன் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர்கள் திரு M. மணிவண்ணன், செயற்பொறியாளர்/ இ&ப/ நகரியம்/தஞ்சாவூர், திரு K. அண்ணாசாமி, உதவி செயற்பொறியாளர்/ இ&ப / நகரியம்/தஞ்சாவூர் மற்றும் திரு A. முத்துகுமரன், உதவி மின்பொறியாளர்/ இ&ப / புறநகர்/மேற்கு-தஞ்சாவூர், தஞ்சாவூர் மின் பகிர்மான வட்டம் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதங்களை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள்

சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 **<u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:**

5.1 மேல்முறையீட்டாளர் தன் நகர் பகுதியில் நட்சத்திர நகர் 1ம் தெரு முதல் 4ம் தெரு வரை உயர் மின்அழுத்த பாதை செல்வதாகவும், இந்த பாதை கரண்டு இல்லாத மின்பாதை எனவும், இதை அகற்றுவதற்கு தஞ்சையில் உள்ள மேற்பார்வை மின்பொறியாளர் மூலமாக குறைதீர் மன்றம்/தஞ்சை அவர்களுக்கு மனு கொடுத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

5.2 குறைதீர் மன்றம் அவர்களுக்கு கொடுத்த மனுவினை கடந்த 08.03.2024 அன்று விசாரித்த போது தங்கள் பகுதியில் மனைகளில் உயர்அழுத்த மின்பாதை செல்வதை வரை படம் மூலம் தெளிவாக தெரிவித்துள்ளதாகவும், குறைதீர் மன்றம் அவர்கள் தங்களிடம் கள ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுப்பதாக கூறியதாகவும், தற்போது மேற்பார்வை பொறியாளர் மூலமாக செயற்பொறியாளர்/நகரம்/தஞ்சை அவர்கள் கூறியதன் பேரில் தங்களுக்கு மின் பாதையை மாற்றி அமைக்க தொழில் நுட்பசாத்திய கூறுகள் இல்லை என்று செயற்பொறியாளர் நகரம் தஞ்சை அவர்கள் அறிவுறுத்தியுள்ளதாகவும், இது ஏற்புடையதாக இல்லை என்றும், வேண்டுமென்றே இந்த பணியை செய்யக் கூடாது என்று செயற்பொறியாளர்/நகரம்/தஞ்சை கூறியுள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 ஆகவே வேறு ஒரு செயற்பொறியாளர் அவர்களை நியமனம் செய்து அறிக்கை கேட்டால் உண்மை நிலவரம் தெரியவரும் என்பதை தெரிவிப்பதோடு தங்கள் நகர் வாசிகள் கொடுத்த புகாரும் தஞ்சை சட்டமன்ற உறுப்பினர் திரு TKG நீலமேகம் கொடுத்த புகாரினையும் தன் மனுவினை பரிசீலனை செய்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:

6.1 மனுதாரர் குறிப்பிட்டுள்ள நட்சத்திர நகர் 1ம் தெரு முதல் 4ம் தெரு வரை ஒரே கம்பத்தில் இரண்டு மின்பாதைகள் (Double circuits) முறையே 11 கேவி நிர்மலா நகர் மற்றும் 11 கேவி மத்திய அலுவலகம் மின் பாதைகள் உள்ளதாகவும், 11 கேவி நிர்மலா நகர் மின்பாதையில் மின்னோட்டம் பயன்பாட்டில் உள்ளதாகவும், 11 கேவி மத்திய அலுவலகம் மின்பாதை மின்சாரம் இல்லாமல் அவசர காலங்களில் 110/33-11 கேவி தஞ்சாவூர் தொகுப்பு துணை மின் நிலையத்தில் மின்தடை ஏற்பட்டாலும் 110/11 கேவி மணிமண்டபம் துணை மின் நிலையத்தில் அவசர காலங்களில் மின் தடை ஏற்பட்டாலும் back feeding supply பெறுவதற்காக உள்ளதாகவும், இம் மின்பாதை கடந்த சுமார் 30 ஆண்டுகளுக்கு மேலாக உள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 திரு V.பாலகிருஷ்ணன் அவர்கள் நட்சத்திர நகரில் தங்களது இடத்தின் அருகே செல்லும் மேற்கண்ட மின்பாதைகளை இடமாற்றம் செய்ய 13.10.2023 அன்று இணையதளம் மூலமாக விண்ணப்பித்து விண்ணப்ப கட்டணம் ரூ.2413/- செலுத்தியுள்ளதாகவும், வைப்பு பங்களிப்பு வேலை (DCW) திட்டத்தில் மேற்படி விண்ணப்பத்திற்கு மதிப்பீடு தயார் செய்து மேற்பார்வை பொறியாளர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டு கடந்த 12.02.2024 அன்று அனுமதி பெறப்பட்டு மதிப்பீடு தொகை ரூ.9,05,680/- செலுத்த கோரிக்கை அறிவிப்பு கடிதம் (Demand notice) 05.03.2024 அன்று விண்ணப்பதாரர் திரு. V.பாலகிருஷ்ணன் அவர்களுக்கு அனுப்பப்பட்டதாகவும், மதிப்பீடு தொகையினை விண்ணப்பதாரர் செலுத்தவில்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 மனுதாரர் 05.03.2024 அன்று தலைவர் மின் நுகர்வோர் குறைதீர் மன்றம் தஞ்சாவூர் அவர்களிடம் அளித்த மனு எண்.18/2024 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், 08.03.2024 அன்று நடைபெற்ற மின்நுகர்வோர் குறைதீர் மன்றத்தில் மனுதாரர் திரு V. பாலகிருஷ்ணன் கலந்து கொண்டார்கள் என்றும், 08.03.2024 அன்று குறைதீர் மன்றத்தில் மனுதாரர் குறிப்பிட்ட இடத்தினை மீண்டும் கள ஆய்வு செய்து மனுதாரர் கூறும் வழித்தடத்தில் 11 கேவி உயரழுத்த மின்பாதைகளை மாற்றி அமைக்க சாத்திய கூறுகள் உள்ளனவா என ஆய்வு செய்து அதன் ஆய்வு

அறிக்கையினை செயற்பொறியாளர்/ இபரா/ நகரியம்/ தஞ்சாவூர் அவர்கள் அளிக்குமாறு தலைவர் மின்நுகர்வோர் குறைதீர் மன்றம் தஞ்சாவூர் அவர்கள் தெரிவித்ததாகவும், கடந்த 14.03.2024 அன்று செயற்பொறியாளர்/ இபரா/ நகரியம்/ தஞ்சாவூர் அவர்களால் கள ஆய்வு செய்யப்பட்டதாகவும், மனுதாரர் வீட்டின் அருகே 11 கேவி உயரழுத்த மின்பாதைகள் ஒரே கம்பத்தில் இரண்டு மின்பாதைகள் (Double circuits) முறையே 11 கேவி நிர்மலா நகர் மற்றும் 11 கேவி மத்திய அலுவலகம் மின்பாதைகள் செல்கின்றன என்றும் 11 கேவி நிர்மலா நகர் மின்பாதை பயன்பாட்டில் உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். 11 கேவி மத்திய அலுவலகம் மின்பாதையில் மின்சாரம் இல்லாமல் அவசர காலங்களில் 110/33-11 கேவி தஞ்சாவூர் தொகுப்பு மின் நிலையத்திலும் மற்றும் 110/11 கேவி மணிமண்டபம் துணை மின் நிலையத்திலும் மின்தடை ஏற்பட்டால் back feeding supply பெறுவதற்காக உள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 மனுதாரர் குறைதீர் மன்றத்தில் அளித்த வரைபடத்தில் பயன்பாட்டில் உள்ள 11 கேவி நிர்மலா நகர் மின்பாதையை மட்டும் இடம் மாற்றம் செய்யும்படி கோரியுள்ளதாகவும், Back feeding supply பெறுவதற்காக ஏற்கனவே உள்ள 11 கேவி மத்திய அலுவலக உயரழுத்த மின்பாதையை மாற்றியமைக்க வரைபடத்தில் குறிப்பிடப்படவில்லை என்றும், 11 கேவி மத்திய அலுவலக உயரழுத்த மின்பாதை அவசர காலங்களில் இரண்டு மின் நிலையங்களில் இருந்து Back feeding supply பெறுவதற்காக உள்ளதாலும் மனுதாரர் வரைபடத்தில் கூறியுள்ளபடி ஒரு மின்பாதையை மட்டும் இடம் மாற்றி அமைக்க தொழில்நுட்ப சாத்திய கூறுகள் இல்லை என அறிக்கை அளிக்கப்பட்டதாகவும், இதன் அடிப்படையில் குறைதீர் மன்ற தீர்வில் தலைவர் அவர்கள் இரண்டு உயரழுத்த மின்பாதையை நுகர்வோர் கூறும் மாற்று வழிப்பாதையில் மாற்றியமைக்க தொழில்நுட்ப சாத்திய கூறுகள் இல்லை எனவும் ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்ட மதிப்பீட்டின்படி மனுதாரர் முழு தொகையினை ரூ.9,05,680/- செலுத்தினால் உயரழுத்த மின்பாதையை மாற்றி அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அறிவுறுத்தப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 இவ்வழக்கில் மனுதாரர் கோருவது போல் மனுதாரர் வீட்டின் அருகே செல்லும் இரண்டு உயர் அழுந்த மின்பாதைகளின் கட்டமைப்பை மாற்றி அமைக்க வாரிய விதிகளின்படி சாத்திய கூறுகள் இல்லை என்றும் விண்ணப்பதாரர் வைப்பு பங்களிப்பு

வேலை (DCW) திட்டத்தில் இணையதளத்தில் விண்ணப்பித்து மதிப்பீடு தொகையினை முழுவதும் செலுத்தும் பட்சத்தில் உரிய நடவடிக்கை விரைவில் மேற்கொள்ளபடும் என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

## 7.0 மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு:

7.1 மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள் எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து பார்க்கும்பொழுது கீழ்க்கண்டவைகள் வழக்கெழு வினாக்களாக தெரிக்கின்றன.

1. மேல்முறையீட்டாளர் தன்னுடைய வீட்டின் முன் செல்லும் உயரழுத்த மின்னூட்டி பாதை (HT Feeder) பயனற்ற அமைப்பாக இருப்பதனால் அதனை அகற்ற முறையிடும் கோரிக்கை சரியானதா?
2. நிறுவப்பட்ட மின்னூட்டி அமைப்பு பாதுகாப்பான முறையில் நிறுவப்பட்டுள்ளதா?
3. மேல்முறையீட்டாளர் தன்னுடைய பகுதியில் செல்லும் உயரழுத்த மின்பாதையை வேறு வழியில் மாற்றியமைக்க சாத்திய கூறுகள் உள்ளன என்றும், இந்நிலையில் அதற்கான திட்ட மதிப்பீட்டு தொகை யாரை சார்ந்தது?

## 8.0 வழக்கெழு வினா 1–ற்கான தீர்வு:

8.1 மேல்முறையீட்டாளர் தன் நகர் பகுதியில் நட்சத்திர நகர் 1 ஆம் தெரு முதல் 4 ஆம் தெரு வரை உயர் மின்அழுத்த மின்பாதை செல்வதாகவும், இந்த பாதை கரண்டு இல்லாத மின்பாதை எனவும், இதை அகற்றுவதற்கு தஞ்சையில் உள்ள மேற்பார்வை மின்பொறியாளர் மூலமாக குறைதீர் மன்றம்/தஞ்சை அவர்களுக்கு மனு கொடுத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். எதிர்மனுதாரர் தங்களுக்கு மின் பாதையை மாற்றி அமைக்க தொழில் நுட்பசாத்திய கூறுகள் இல்லை என்று தெரிவித்ததாகவும், இது ஏற்புடையதாக இல்லை என்றும், வேண்டுமென்றே இந்த பணியை செய்யக் கூடாது என்ற நிலைபாட்டை எதிர்மனுதாரர் எடுத்ததாக மேல்முறையீட்டாளர் முறையிட்டார்.

8.2 எதிர்மனுதாரர் தன்னுடைய வாதுரையில் மனுதாரர் குறிப்பிட்டுள்ள நட்சத்திர நகர் 1 ஆம் தெரு முதல் 4ம் தெரு வரை ஒரே கம்பத்தில் இரண்டு மின்பாதைகள் (Double circuits) முறையே 11 KV நிர்மலா நகர் மற்றும் 11 KV மத்திய அலுவலகம் மின் பாதைகள்

உள்ளதாகவும், 11 KV நிர்மலா நகர் மின்பாதையில் மின்னோட்டம் பயன்பாட்டில் உள்ளதாகவும், 11 KV மத்திய அலுவலகம் மின்பாதை மின்சாரம் இல்லாமல் அவசர காலங்களில் 110/33-11 KV தஞ்சாவூர் தொகுப்பு துணை மின் நிலையத்தில் மின்தடை ஏற்பட்டாலும் 110/11 KV மணிமண்டபம் துணை மின் நிலையத்தில் அவசர காலங்களில் மின் தடை ஏற்பட்டாலும் back feeding supply பெறுவதற்காக உள்ளதாகவும், இம் மின்பாதை கடந்த சுமார் 30 ஆண்டுகளுக்கு மேலாக உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்

8.3 மனுதாரர் குறைதீர் மன்றத்தில் அளித்த வரைபடத்தில் பயன்பாட்டில் உள்ள 11 KV நிர்மலா நகர் மின்பாதையை மட்டும் இடம் மாற்றம் செய்யும்படி கோரியுள்ளதாகவும், Back feeding supply பெறுவதற்காக ஏற்கனவே உள்ள 11 KV மத்திய அலுவலக உயரழுத்த மின்பாதையை மாற்றியமைக்க வரைபடத்தில் குறிப்பிடப்படவில்லை என்றும், 11 KV மத்திய அலுவலக உயரழுத்த மின்பாதை அவசர காலங்களில் இரண்டு மின் நிலையங்களில் இருந்து Back feeding supply பெறுவதற்காக உள்ளதாலும் மனுதாரர் வரைபடத்தில் கூறியுள்ளபடி ஒரு மின்பாதையை மட்டும் இடம் மாற்றி அமைக்க தொழில்நுட்ப சாத்திய கூறுகள் இல்லை என அறிக்கை அளிக்கப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்தார்.

8.4 மேற்கூறிய வாதி பிரதிவாதிகளின் வாதங்களை ஆராயும் போது, மேல்முறையீட்டாளர் பயன்பாட்டில் இல்லாத மின்னூட்டி கட்டமைப்பை மாற்ற வேண்டும் என்று வலியுறுத்திய நிலையில் எதிர்மனுதாரரின் வாதத்தை கூர்ந்து ஆராய்ந்தால் நட்சத்திர நகர் 1 ஆம் தெரு முதர் 4 ஆம் தெரு வரை ஒரே மின்கம்பத்தில் இரண்டு மின்பாதைகள் முறையே 11 KV நிர்மலா நகர் மற்றும் 11 KV மத்திய அலுவலகம் மின் பாதைகள் உள்ள நிலையில் அவசர காலங்களில் 110/33-11 KV தஞ்சாவூர் தொகுப்பு துணை மின் நிலையத்தில் மின்தடை ஏற்பட்டாலும் 110/11 KV மணிமண்டபம் துணை மின் நிலையத்தில் அவசர காலங்களில் மின் தடை ஏற்பட்டாலும் back feeding supply பெறுவதற்காக நிறுவப்பட்ட கட்டமைப்பாக இருப்பதாக தெரியவருதால் மேலும், இம்மின்பாதை அமைப்பு கடந்த சுமார் 30 ஆண்டுகளுக்கு மேலாக நிறுவப்பட்டதன் அடிப்படையில் மேல்முறையீட்டாளர் உரிமைதாரரின் மின்பாதை கட்டமைப்பு பயனற்றது என்ற முறையீடு உரிமதாரரால் பொது மக்களின் பயன்பாடுகளுக்கான நிறுவப்பட்ட

மின்பாதை அமைப்புகளை அகற்ற கோரும் கோரிக்கை முறையீடாகவே கருத இயலவில்லை என்பதால் அக்கோரிக்கை தள்ளுபடி செய்யப்படுகிறது.

## 9.0 <u>வழக்கெழு வினா 2–ற்கான தீர்வு:</u>

9.1 கேட்புரையின் போது மேல்முறையீட்டாளரிடம் எதற்காக நிறுவப்பட்ட மின்பாதை கட்டமைப்பை மாற்ற வேண்டும் என்று வினவிய போது, தன்னுடைய வீட்டிற்கு அருகில் செல்லும் மின்பாதை பாதுகாப்பற்ற நிலையில் இருப்பதால் அதன் பொருட்டே அகற்ற வேண்டுமென்று தன்னுடைய உள்ளகிடக்கத்தை தெரிவித்தார். எதிர்மனுதாரரோ இந்த மின்பாதை அமைப்பு நிறுவப்பட்டு 30 ஆண்டுகளுக்கு மேலானதாகவும், தற்சமயம் வரை பாதுகாப்பான முறையில் பராமரிக்கப்பட்டு வருவதாகவும் ஆனால் மேல்முறையீட்டாளர் அதற்கு பின்பு தான் வீடு கட்டி மின் இணைப்பு பெற்றதாகவும் தெரிவித்தார். இந்த தகவலை மேல்முறையீட்டாளர் வினவிய போது அவரும் எதிர்மனுதாரரின் கருத்தை மறுதலிக்கவில்லை. ஆகவே, இம்மின்பாதை கட்டமைப்பு நிறுவப்பட்ட பின்பு தான் மேல்முறையீட்டாளர் வீடு கட்டியதும் தற்சமயம் பாதுகாப்பு இல்லை என்று கூறுவதால் இது சம்பந்தமாக மின்பாதைக்கும், கட்டிடத்திற்கும் உள்ள இடைவெளி குறித்த விதிமுறைகள் பற்றி அறிந்து கொள்ள நாம் CEA (measure relating to safety and electric supply) Regulations 2023 இன் 62 வது விதி, Chapter VII ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> ***62. Clearance from buildings of lines of voltage and service lines not exceeding 650 V. –***
> *(1) An overhead line shall not cross over an existing building as far as possible and no building shall be constructed under an existing overhead line.*
> *(2) Where an overhead line of voltage not exceeding 650 V passes above or adjacent to or terminates on any building, the following minimum clearances from any accessible point, on the basis of maximum sag, shall be observed, namely: –*
> *(i) for any flat roof, open balcony, varandah roof and lean-to-roof, –*
> *(a) when the line passes above the building, a vertical clearance of 2.5 metre from the highest point; and*
> *(b) when the line passes adjacent to the building, a horizontal clearance of 1.2 metre from the nearest point;*
> *(ii) for pitched roof, –*
> *(a) when the line passes above the building, a vertical clearance of 2.5 metre immediately under the line; and*
> *(b) when the line passes adjacent to the building, a horizontal clearance of 1.2 metre.*
> *(3) Any conductor so situated as to have a clearance less than that specified in sub-regulation (2) shall be replaced with Aerial Bunched Cable and to be attached at suitable intervals to a bare earthed bearer wire having a breaking strength of not less than 350 kgf.*

*(4) The horizontal clearance shall be measured when the line is at a maximum deflection from the vertical due to wind pressure.*
*(5) The vertical and horizontal clearances shall be measured as per illustration provided in Schedule VIII C.*
*Explanation. – For the purposes of this regulation, the expression "building" shall be deemed to include any structure, whether permanent or temporary."*

9.2 மேற்கண்ட விதிகளை கூர்ந்து படிக்கும் பொழுது நாம் அறிவது என்னவென்றால் கட்டிடத்திற்கும் நிறுவப்பட்ட மின்பாதை கட்டமைப்புக்கும் இடையே உள்ள இடைவெளி (Horizontal *clearance) 1.2 metres* இருக்க வேண்டும் என்றும் தெரியவருகிறது.

9.3 சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின் வாயிலாக மேல்முறையீட்டாளர் அகற்ற கோரும் மின்பாதையானது ஒரே கம்பத்தில் இரண்டு மின்பாதைகள் (Double circuits) முறையே 11 KV நிர்மலா நகர் மற்றும் 11 KV மத்திய அலுவலகம் மின் பாதைகள் உள்ளதும், இம்மின்பாதையில் கொடுக்கப்பட்டுள்ள பழமையான மின் இணைப்புகள் 1980 வழங்கப்பட்டதும், இதன் மூலம் இம்மின்பாதை கடந்த சுமார் 30 ஆண்டுகளுக்கு மேலாக உள்ளதும் அறிய முடிகிறது. மேலும், மேற்கூறிய மின்பாதைகளுக்கும் மேல்முறையீட்டாளரின் கட்டிடத்திற்கும் இடையே 2 metre இடைவெளி உள்ளதாகவும் தெரியவருகிறது. இது பாதுகாப்பு விதியில் கூறப்பட்ட இடைவெளியை விட அதிகமாக உள்ளதால் மேல்முறையீட்டாளர் பாதுகாப்பற்ற நிலையில் இருப்பதாக கூறும் வாதம் நிராகரிக்கப்படுகிறது.

**10.0 <u>வழக்கெழு வினா 3–ற்கான தீர்வு:</u>**

10.1 மேல்முறையீட்டாளர் தான் மின்சார வாரியத்தில் பணிபுரிந்து ஓய்வு செய்ய அலுவலர் என்றும் ஆகவே தான் அளித்த வரைபடத்தின் அடிப்படையில் மின்பாதை மாற்றியமைக்க சாத்திய கூறுகள் உள்ளது என்றும் ஆனால் எதிர்மனுதாரர் அதற்கு சாத்திய கூறுகள் இல்லை என்றும் வேண்டுமென்றே நிலைபாடு எடுப்பதாகவும் முறையிட்டார். எதிர்மனுதாரர் தன்னுடைய வாதுரையில் மேல்முறையீட்டாளர் அளித்த வரைபடத்தில் பயன்பாட்டில் உள்ள 11 KV நிர்மலா நகர் மின்பாதையை மட்டும் இடம் மாற்றம் செய்யும்படியும், Back feeding supply பெறுவதற்காக ஏற்கனவே உள்ள 11 KV மத்திய அலுவலக உயரழுத்த மின்பாதையை மாற்றியமைக்க வரைபடத்தில்

குறிப்பிடப்படவில்லை எனவும், 11 KV மத்திய அலுவலக உயரழுத்த மின்பாதையானது அவசர காலங்களில் இரண்டு மின் நிலையங்களில் இருந்து Back feeding supply பெறுவதற்காக உள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ள நிலையில் மேல்முறையீட்டாளர் வரைபடத்தில் கூறியுள்ளபடி ஒரு மின்பாதையை மட்டும் இடம் மாற்றி அமைக்க தொழில்நுட்ப சாத்திய கூறுகள் இல்லை என்று தெரிவித்தார்.

10.2 ஆகவே, மேற்கூறிய ஆவணங்களை ஆய்வு செய்யும் போது மேல்முறையீட்டாளர் ஒரு மின்பாதை கட்டமைப்பில் இரண்டு மின்னூட்டி இருக்கும் நிலையில் ஒரு மின்னூட்டியை மட்டுமே அதாவது 11 KV நிர்மலா நகர் மின்பாதையை மட்டுமே மாற்றவும் 11 KV மத்திய அலுவலக உயரழுத்த மின்பாதை மின்னூட்டி அமைப்பு தேவையில்லை என்று வாதிடுவது உரிமதாரரின் வரம்புக்குள் தேவையில்லாமல் தலையிடுவதாக கருத்தில் கொள்ள வேண்டியிருக்கிறது.

10.3 மேலும் மேல்முறையீட்டாளரிடம் தங்கள் வீட்டின் அருகே செல்லும் மின்பாதையை மாற்றியமைக்க விரும்பினால் அதற்கான கட்டணத்தை செலுத்த தயாரா என்று வினவிய போது தற்சமயம் மதிப்பீட்டு தொகை ரூ.9,05,680/–ஐ செலுத்த இயலாது என்றும் ஆனால் தான் தற்சமயம் சொல்ல வருகின்ற வேறு புதிய பாதையில் மதிப்பீடு செய்தால் மதிப்பீட்டு தொகை குறைய வாய்ப்புள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்தார். ஆனால் எதிர்மனுதாரரோ மின்பாதை கட்டமைப்பை வேறு வழியாக மாற்றுவதென்றால் அது பொது பாதையில் மற்ற பயனீட்டாளருக்கும் இடையூறு இல்லாமல் பாதுகாப்பான முறையில் நிறுவப்பட வேண்டும். அதன் அடிப்படையிலேயே இந்த மாற்று வழி கட்டமைப்பு மதிப்பிடப்பட்டதாகவும், வேறு வழியில்லை என்றும் தெரிவித்தார். இந்நிலையில் ஒரு கட்டமைப்பை மாற்றுவது அறிய தமிழ்நாடு மின்சார வழங்கல் விதி தொகுப்பு விதி 5(6)–ஐ ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> ***"மின்இணைப்பு/மின்தொடர், கட்டமைப்பு மற்றும் சாதனங்கள் மாற்றல் கட்டணம்:***
> *(1) மின்னிணைப்பு / மின்தொடர், கட்டமைப்பு மற்றும் சாதனங்கள் இடமாற்றுவதற்கான கட்டணத்தை நுகர்வோரே ஏற்க வேண்டும். மதிப்பீடு செய்யப்பட்ட இடமாற்றத் தொகையை நுகர்வோர் முழுமையாக முன் கூட்டியே கட்டிவிட வேண்டும். மதிப்பீட்டின் நகல் நுகர்வோருக்கு வழங்க வேண்டும். அத்தொகை செலுத்தப்பட்ட பின்னரே இடமாற்ற பணி மேற்கொள்ளப்படும். "*

10.4 மேற்கூறிய விதியை ஆராயும்போது தற்சமயம் பாதுகாப்பாக நிறுவப்பட்ட நிலையிலிருந்து மின்பாதையை இடமாற்றம் செய்ய மேல்முறையீட்டாளர் கோரும்பட்சத்தில் உரிய மதிப்பீட்டு தொகையை மேல்முறையீட்டாளர் செலுத்த வேண்டும் என்பது தெரிய வருகிறது.

10.5 ஆனால் மேல்முறையீட்டாளரால் வேறு புதிய வழியில் மின்கட்டமைப்பை மாற்றி அமைத்தால் தன்னால் செலுத்த வேண்டிய திட்ட மதிப்பீட்டின் தொகை குறைய வாய்ப்புள்ளதாக தெரிவித்த நிலையில் எதிர்மனுதாரர் மேல்முறையீட்டாளரின் கருத்தின் அடிப்படையில் கள ஆய்வு செய்து அதில் இரண்டு மின்னூட்டிகளும் நிறுவுவதற்கு பொது பாதையில் வழியிருப்பினும் அது மற்ற பயனீட்டாளருக்கு இடையூறு இல்லாத நிலையில் தொழில்நுட்ப சாத்திய கூறுகள் இருப்பின் திட்ட மதிப்பீட்டை மறு பரிசீலனை செய்யுமாறு எதிர்மனுதாரருக்கு அறிவுறுத்தப்படுகிறது. அவ்வாறு மேல்முறையீட்டாளர் கூறும் மாற்று வழியில் கள ஆய்வில் மறு பரிசீலனை செய்ய வாய்ப்பில்லை என்றாலும் அத்தகவலை இவ்வாணை பெற்ற 30 நாட்களுக்குள் மேல்முறையீட்டாளருக்கு தெரிவிக்குமாறு இவ்வழக்கு முடித்து வைக்கப்படுகிறது.

**11.0 <u>முடிவுரை</u>:**

11.1 மேற்கூறிய பத்திகளில் உள்ள தீர்வின்படி, மேல்முறையீட்டாளர் பயனற்ற நிலையில் உள்ள மின்னூட்டி மின்பாதைகளை அகற்ற கோரும் கோரிக்கை நிராகரிப்படுகிறது. மேலும் பாதுகாப்பான முறையில் நிறுவப்பட்ட மின்பாதை மாற்ற விரும்பினால் எதிர்மனுதாரர் தொழில்நுட்ப சாத்திய கூறுகளின் அடிப்படையில் மின்பாதையை அமைக்க தெரிவித்த திட்ட மதிப்பீட்டு தொகையை மேல்முறையீட்டாளர் செலுத்தும் பட்சத்தில் மின்பாதையை மாற்றியமைக்க எதிர்மனுதாரருக்கு உத்திரவிடப்படுகிறது.

11.2 மேற்கண்ட தீர்வுடன் இந்த மேல்முறையீட்டு மனு எண் 47/2024 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
மின்குறைதீர்ப்பாளர்

<u>பெறுநர்</u>

1. திரு V. பாலகிருஷ்ணன், – By RPAD
எண்.18, நட்சத்திர நகர், முதல் தெரு,
தஞ்சாவூர் – 613 005.

2. செயற்பொறியாளர்/ இ&ப/ நகரியம்/தஞ்சாவூர்,
தஞ்சாவூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
10A, TNEB, கோர்ட் ரோடு, தஞ்சாவூர் – 613 001.

3. உதவி செயற்பொறியாளர்/ இ&ப / நகரியம்/தஞ்சாவூர்,
தஞ்சாவூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
10A, TNEB, கோர்ட் ரோடு, தஞ்சாவூர் – 613 001.

4. உதவி மின்பொறியாளர்/ இ&ப / புறநகர்/மேற்கு–தஞ்சாவூர்,
தஞ்சாவூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
ராஜாஜி ரோடு, E.B. காலனி, நாஞ்சி ரோடு,
தஞ்சாவூர் – 613 006.

5. மேற்பார்வை பொறியாளர், – By Email
தஞ்சாவூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
எண்.1, வல்லம் ரோடு, தஞ்சாவூர் – 613 007.

6. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By Email
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

7. செயலாளர், – By Email
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

8. உதவி இயக்குநர் (கணினி) – <u>தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக</u>
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.